# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 148/2022 தேதி- 02.02.2026

(D.W.1) . மணிகண்டதேவ்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ-1 ல் வள்ளியம்மைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துதான் பி.வா.சா.ஆ. 2 ஆவணத்திலுள்ள சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 2 ல் எ பட்டிகை சொத்து மாதவியம்மாவிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 2 ல் பி பட்டிகை சொத்து கார்த்தியாயினி பிள்ளை என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 2 ல் சி பட்டிகை சொத்து ராமன் பிள்ளைக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். டி பட்டிகை சொத்து குமாரபிள்ளைக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். எ பட்டிகையில் பழைய சர்வே எண் 480 ல் 10 சென்டும், 449 ல் 20 சென்டும், 409 ல் 20 சென்டும், 449/517 ல் 20 சென்டும் ஆக மொத்தம் 70 சென்ட் மாதவியம்மாபிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

1986 ல் மாதவியம்மா ராம்குமாருக்கு பி.வா.சா.ஆ- 3 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 3 ஆவணப்படி சர்வே எண் 409 ல் 1 சென்டும் மற்றும் 449/517 எ வில் 3 சென்ட் 357 சதுரலிங்ஸ் ம் ராம்குமாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 3 ஆவணம் 1986 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அதில் றீசர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ- 3 ஆவணம் எழுதிய அன்று மாதவியம்மா அவரது மகளான ரேணுகாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் சர்வே எண் 449/517 ல் 10.251 சென்ட் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ- 5 ஆவணப்படி மாதவியம்மா கிருஷ்ணகுமாருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திலுள்ள சர்வே எண் 449 மற்றும் 409 அடங்கிய சொத்து என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ- 5 ஆவணம் சரியா தவறா என்றால் கிருஷ்ணகுமாருக்கு மாதவியம்மா எழுதிக்கொடுத்தது அதில் குறிப்பிட்டிருக்கும் சர்வே எண் சரியல்ல. பி.வா.சா.ஆ- 5 ஆவணத்தில் றீசர்வே எண் 358/10 என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. அளவு 3 சென்ட் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ- 6 ஆவணப்படி றீசர்வே எண் 358/1டி என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 7 ஆவணமானது கார்த்தியாயினி அம்மா கீதாகுமாரிக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 2 ஆவணப்படி கார்த்தியாயினி அம்மாவிற்கு பி பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணப்படி சர்வே எண் 494 ல் 41 1/2 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் வழக்கிற்குசம்பந்தமில்லாத வஸ்து என்பதால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ- 7 ஆவணத்தை படித்துபார்த்துதான் தாக்கல் செய்தேன். பி.வா.சா.ஆ- 7 ஆவணத்தில் கார்த்தியாயினி அம்மாவிற்கு எ பட்டிகை ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 2 ஆவணப்படி எ பட்டிகை சொத்து மாதவிபிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ- 7 ஆவணத்தில் சர்வே எண் 409 மற்றும் 449 குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால் அதை எழுதிக்கொடுத்த கார்த்தியாயினி அம்மாவிற்கு அதில் உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 7 ஆவணத்தை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட பி.வா.சா.ஆ- 11 ஆவணத்தை வைத்துதான் றிஎஸ். விஜயகுமார் என்பவருக்கு கிரைய கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 7 ஆவணப்படி கார்த்தியாயினி அம்மாவிற்கு உரிமையில்லாத சொத்தை பி.வா.சா.ஆ- 11 ஆவணம்மூலம் மேற்படி றிஎஸ்.விஜயகுமாருக்கு கிரையம் கொடுத்தது செல்லுபடி ஆகாது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ- 11 ஆவணப்படி றிஎஸ். விஜயகுமாருக்கு எந்த உரிமையும் இல்லாததால் பி.வா.சா.ஆ- 12 ஆவணம் செல்லுபடியாகாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 8 ஆவணம் ராமன்பிள்ளை சௌதாமினிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 2 ஆவணப்படி ராமன்பிள்ளைக்கு சி பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 8 ஆவணத்தில் அவரது மகளுக்கு எ பட்டிகை சொத்து என குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ- 8 ஆவணப்படி அவரது மகளுக்கு 1.950 செண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 8 ஆவணத்தை எழுதிக்கொடுத்தவருக்கு எந்த உரிமையும் இல்லாமல் எழுதிக்கொடுத்ததால் அந்த ஆவணம் செல்லுபடியாகாது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ- 10 ஆவணம் சௌதாமினி அம்மா ஜி.எஸ்.விஜயகுமாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 8 ல் ஆவணப்படி எந்த உரிமையும் இல்லாததால் ஜி.எஸ்.விஜயகுமாருக்கு கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 8 ஆவணத்தில் 1.950 சென்ட் என குறிப்பிட்டிருந்த போதிலும் பி.வா.சா.ஆ- 10 ஆவணத்தில் 2.770 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 10 ஆவணம் பிறர் சொத்தை அபகரிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ- 13 ஆவணம் ஜி.எஸ் விஜயகுமார் ரமணிபாய்க்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 10 ஆவணப்படி ஜி.எஸ் விஜயகுமாருக்கு எந்த உரிமையும் இல்லாமல் பி.வா.சா.ஆ. 13 ஏற்படுத்தப்பட்டதால் அது செல்லுபடியாகாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ- 12 மற்றும் பி.வா.சா.ஆ- 13 படி விலை வாங்கிய ரமணிபாய் என்னுடைய அம்மா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 9 வது ஆவணம் வா.சா.ஆ. 1 ஆவணமாக குறியிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 9 ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கும் சொத்து விபரம் சரிதான். அதற்கான பழைய சர்வே எண் 409 மற்றும் 449 என்றால் சரியாக ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ- 9 ஆவணத்தில் மணிகண்டதேவ் என குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் நான்தான். பி.வா.சா.ஆ- 9 ஆவணத்திலுள்ள 9 சென்ட்தான் இந்த வழக்கின் பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்படி 9 சென்டும் நாளதுவரை பாகம் ஆகவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்திலுள்ள 6 நபர்களும் கூட்டாகத்தான் வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ- 9 ஆவணம் செல்லுபடியாகாது என்று நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 14 ஆவணம் வணிக வளாகம் கட்டுவதற்காக பஞ்சாயத்தில் அனுமதி பெற்ற வரைபடம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 14 ஆவணம் எந்த தேதியில் மனு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி வணிக வளாகத்தில் தற்போது எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ- 16 பட்டாவானது கூட்டுப்பட்டா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ- 16 ஆவணத்தில் இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் பெயர் இருக்கிறது. எனது தாயார் ரமணிபாய் பெயரும் இருக்கிறது. பி.வா.சா.ஆ- 12 மற்றும் பி.வா.சா.ஆ- 13 ஆவணப்படிதான்

ரமணிபாய் பெயர் மேற்படி பட்டாவில் ரமணிபாய் பெயர் இருக்கிறது என்றாலும் பி.வா.சா.ஆ- 12 மற்றும் பி.வா.சா.ஆ- 13 ஆவணம் செல்லுபடியாகாத ஒரு ஆவணம் என்றால் சரியல்ல.

எனது பெயரில் வீட்டுவரி ரசீதோ, சொத்து வரி ரசீதோ இல்லை. வாதிக்கு 6 ல் ஒருபங்கு கிடைக்க உரிமைப்பட்டவர் அதை மறைத்து பொய்யாக தர்க்கம் செய்கிறேன் என்றால் சரியல்ல.